செ.வெ.எண்.18 நாள்:19.05.2020

**நீலகிரி மாவட்டம் கூடலூர் நாடுகாணி மற்றும் கக்கநல்லா பகுதிகளில் உள்ள மாநில எல்லைகளில் இன்று (19.05.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

************

நீலகிரி மாவட்டம் கூடலூர் நாடுகாணி மற்றும், கக்கநல்லா பகுதிகளில் உள்ள மாநில எல்லையில் வாகன தணிக்கை நடைபெற்று வருவதை இன்று (19.05.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்ப விழிப்புணர்வு பணிகள் நீலகிரி மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பதிப்பு முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டு, கடந்த சில வாரங்களாகவே புதிய தொற்று இல்லாத நிலை தொடர்கின்றது. இந்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் இயல்பு நிலை பாதிக்கப்படாமல் இருக்கவும் பல்வேறு பணிகளுக்கு சிறப்புத் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. இத்தளர்வு காலத்தில் பொதுமக்கள் சமூக இடைவெளியினை கடைபிடிப்பது சமூக விலகலை பின்பற்ற வேண்டும்.

நீலகிரி மாவட்டம் முக்கிய சுற்றுலா தலமாக விளங்குவதாலும் அண்டை மாநிலமான கேரளா மற்றும் கர்நாடகா மாநிலத்துடன் பிரதான சாலை போக்குவரத்தினை கொண்டிருப்பதாலும் எல்லையோரங்களில் உள்ள கக்கனல்லா, நம்பியார்குன்னு, தாளூர், சோலாடி, கக்குண்டி, பூலக்குன்னு, நாடுகாணி, பாட்டவயல், பர்லியாறு, குஞ்சப்பனை, குண்ணி, மணல்வயல் மற்றும் கோட்டூர் ஆகிய 13 சோதனை சாவடிகளிலும் கண்காணிப்பினை தீவிரப்படுத்தவும், மாவட்டத்தினுள் நுழையும் அனைத்து வாகனங்களையும், அதின் ஓட்டுநர் உள்ளிட்டவர்களின் விவரங்களையும் பதிவு செய்ய சோதனைச் சாவடி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், எல்லைகளிலேயே,

காய்ச்சல் பரிசோதனை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளிமாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் கட்டாயம் உரிய விதிகளின்படி தனிமைப்படுத்தப்படுவர்.

எனவே மக்கள் தங்களின் நலன் கருதி மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து தங்களின் முழு ஒத்துழைப்பினை நல்கி, நீலகிரி மாவட்டம் தொடர்ந்து கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக விளங்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.**